பக்கங்கள் 14 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## பாட்டியின் மாத்திரைகளை உட்கொண்ட பேத்தி மரணம்

### நுவரெலியாவில் சோகம்

நுவரெலியா, ஸ்கிராப் தோட்டத்தில் பாட்டியின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த 15 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர், இரத்த அழுத்தத்தைக் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை 30.04.2024 அதிர்வு 274

# வடக்கில் நாளை பெருமெடுப்பில் மே தின நிகழ்வு




## தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்பாடு

சர்வதேச தொழிலாளர் தினத்தை வடக்கில் நாளை பெருமெடுப்பில் கொண்டாடுவதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன. மே தினத்தை அலங்கரிக்கும் வண்ணம் ஊர்வலங்களும், பிரதான மேடை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தின நிகழ்வு நாளை பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு யாழ். மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 04▶

# தமிழ்த் தேசிய மே தின விழாவில் மனோ பங்கேற்பு



## வடக்கில் வாழும் தமது கட்சி அங்கத்தவர்களை கிளிநொச்சியில் அணிதிரளுமாறு அவர் அழைப்பு

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., கிளிநொச்சியில் நடைபெறும் தமிழர் ஐக்கிய மே தின ஊர்வலத்தில் பங்கேற்பதுடன் தமிழ்த் தேசிய மே தின விழாவில் சிறப்புப் பேச்சாளராக கலந்துகொள்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அழைப்பை ஏற்றே மனோ எம்.பி. கிளிநொச்சி வருகின்றார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் எம்.பி., தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதியாக கொழும்பில் நடைபெறும் 04▶

# செட்டிகுளத்தில் நோயாளர்களை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸை வழிமறித்து யானைகள் அட்டகாசம்

(கே.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் ஊடாக மன்னார் செல்லும் பிரதான வீதியில் அம்புலன்ஸ் வாகனம் உள்ளிட்ட வாகனங்களை வழிமறித்து வீதிக்கு வந்த யானைகள் வீதியைக் குறுக்கறுத்து அட்டகாசம் செய்துள்ளன.

செட்டிகுளம், பறயனாளங்குளம் பகுதியிலேயே இன்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக யானைகள் வீதியில் நின்று 04▶





# இன்னுமொரு இந்திய - இலங்கை ஒப்பந்தம் வேண்டும்

## ஆய்வு மாநாட்டில் திலகர் கோரிக்கை

இதுவரை செய்யப்பட்ட ஐந்து இந்திய – இலங்கை உடன்படிக்கைகளிலும் 1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஐந்தாவதை மட்டுமே பேசிக் கொண்டு இருக்கும் இன்றைய சூழலில் அதற்கு முன்னதான 1974, 1964, 1954, 1941 ஆகிய ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் நீட்சியாக இனுமொரு ஒப்பந்தத்தின் தேவை இப்போது எழுந்துள்ளது என்று மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் ஆய்வாளருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்தார்.

தமிழியல் ஆய்வகம் நடத்தி வரும் மாதாந்தக் கருத்தரங்கம் கடந்த சனிக்கிழமை (27) கொழும்புத் தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வரங்கில் கோ.நடேசய்யர் எழுதிய ‘ இந்திய – இலங்கை ஒப்பந்தம்’ (1941) எனும் நூலை முன்வைத்து உரையாற்றியபோதே இத்தகைய பரிந்துரைப்பை ஆய்வு ரீதியாக முன்மொழிந்துள்ளார் திலகராஜா.

தனது ஆய்வுரையில் இன்னுமொரு ‘இந்திய – இலங்கை ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும்’ எனும் தனது பரிந்துரைப்புக்கு பின்வருமாறு தனது நியாயப்பாடுகளையும் அவர் முன்வைத்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற ராஜீவ் – ஜே.ஆர். ஒப்பந்தம்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்டிருப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு காட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் இலங்கையின் வடக்கு – கிழக்கு மக்களுக்கான தீர்வுப் பொதியாக முன்வைக்கப்பட்ட அதேநேரம் அதற்கு முன்பதாக நான்கு இந்திய – இலங்கை ஒப்பந்தங்கள், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் சார்ந்து செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் பிந்திய மூன்றும் (1954, 1964, 1974) இலங்கையில் வாழும் இந்தியர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவது சம்பந்தமான ஒப்பந்தங்களாகும்.

ஆனால், 1941 ஆம் ஆண்டு செய்து




கொள்ளப்பட்ட ‘இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில்’ காலனித்துவ ஆட்சி காலத்தில் இலங்கை நோக்கி வர நேர்ந்த இந்தியர்கள் நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்துவிட்ட நிலையில் அவர்கள் எவ்வாறு இலங்கையில் நிலை நிறுத்தப்படலாம், இலங்கையர்க ளாக அங்கீகரிக்கப்படலாம் என்பது தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட் டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் ஊடாக அப்போதைய இந்தியர்கள் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு இலங்கையர்களாகலாம்? அதற்காக ஒப்பந்தத்தில் உள்ள வாய்ப்புகள் என்ன? என்பதை மலையக நிர்மாண சிற்பி கோ.நடேசய்யர் தனது நூலின் ஊடாக முன்வைத்துள்ளார்.

அவ்வாறு இலங்கையர்களாகிக் கொள்ளாதபட்சத்தில், ஒன்றில் “வெளியேற்றப்படுவீர்கள் அல்லது நிரந்தர கூலிகளாக் கப்படுவீர்கள்” என மிகவும் தீர்க்கக் தரிசனமாக குறிப்பிட்டுள்ளார்.

நடேசய்யர் கூறியது போலவே பின்னாளில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர்களின் இலங்கைக் குடியுரிமை பறிக்கப்பட்டது, ஒரு பகுதியினர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். எஞ்சியோர் இலங்கையில் நிரந்தர கூலிகளாக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் 1941 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மனதில் இறுத்தி மலையகத் தமிழர்கள் சமகால விடயம் சார்ந்து புதியதோர் ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இந்த புதிய சூழல் நடேசய்யர் எதிர்வு கூறிய அந்த விளைவு நிலையில் இருந்து நோக்கப்பட வேண்டியது.

அதாவது இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்ட மலையகத் தமிழர்கள் இந்தியாவில் தாயகம் திரும்பிய ‘சிலோன்காரர்களாகவும்’ அகதி முகாம்களில் அகப்பட்டோர் ‘நாடற்றவர்களாகவும்’ வாழ்கின்றனர். இலங்கையில் வாழ்வோருக்கு இன்றும் ‘இந்தியத் தமிழர்’ அடையாளம் வழங்கப்பட்டு இலங்கை யில் இருந்து அந்நியப் படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கையில் நிரந்தர கூலிகளாக்கப்பட்டுமுள்ளனர்.

எனவே, இலங்கை – இந்திய நாடுகள் இடையே கூறு போடப்பட்டுள்ள ‘மலையகத் தமிழர் இனம்’ அந்தந்த நாடுகளில் இன்னும் முழுமையான அர்த்தமுள்ள குடியுரிமை யாளர்களாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

எனவே, இலங்கையில் வாழும் இந்திய அடையாளம் சுமத்தப்பட்ட மக்கள் முழுமையான இலங்கைப் பிரஜைகளாகவும், இந்தியா (தாயகம்) திரும்பியவர்களும், அகதி முகாம்களில் வாழும் நாடற்றவர்களாக வாழ்வோரும் முழுமையான இந்திய பிரஜைகளாகவும் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது மறுக்கப்பட்ட உரிமைகளை அந்தந்த நாடுகளில் வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட வேண்டும்.” – என்று திலகராஜா குறிப்பிட்டுள்ளதோடு இந்தக் கோரிக்கையை வலியுறுத்திய விரிவான நூல் ஒன்றை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



# நாவிதன்வெளி பள்ளிவாசல்களுக்கு ஹரிஸ் எம்.பியால் நிதி ஒதுக்கீடு!

(சர்ஜூன் லாபீர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ்?, பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நாவிதன்வெளி பிரதேச பள்ளிவாசல்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான ஆவணங்களை பள்ளிவாசல்களின் நிர்வாகத்திடம் வழங்கி வைத்தார்.

நாவிதன்வெளி பிரதேச பள்ளிவாசல்களுக்கு நிதி ஒதுக்கீடு ஆவணம் வழங்கும் நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், பிரதேச அமைப்பாளருமான ஏ.சி.ஏ. நஸார் ஹாஜி, நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி நவாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ. பாவா, பள்ளிவாசல் மற்றும் மதரஸா நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.







# சிட்னியில் நடைபெற்ற சித்திரைத் திருவிழா!

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் உறவுப் பாலமாக சிட்னி தமிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது. தமிழிசை, தமிழ் கலை, நாட்டுப்புற கலைகள், மரபு சார்ந்த கலைகள், தமிழர் வீர விளையாட்டுகள் அனைத்தையும் தற்போதுள்ள தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லும் அரிய பணியை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் சிட்னி நகரில் சித்திரைத் திருவிழா நேற்று முன்தினம் (28) நடைபெற்றுள்ளது.

கலை நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகள், குழந்தைகள், பெரியவர்கள் உட்பட அனைவரும் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிக்காட்டினர். பழங்கால தமிழ்நாட்டு விளையாட்டுகளும் இடம்பெற்றன.

அனைவருக்கும் தமிழரின் மரபு உணவு வகைகள் அறுசுவையுடன் பரிமாறப்பட்டன. இந்த நிகழ்ச்சியை மன்றத்தின் நிர்வாகிகள் கோச்சடை முத்தரசு, சத்தியசீலன், பேரின்பமூர்த்தி, பழனி, வனிதா முத்துசாமி, மதன்குமார், உலோகன், மதன்சத்தியமூர்த்தி, பார்த்திபன், வைஷ்ணவி பிரியா, கரிகால்வளவன், ராஜேஷ், நந்தா கோவிந்தன், நித்தியா, வெங்கி உட்பட பலர் சிறப்பாக நடத்தினர். ஏராளமான தமிழ் மக்களும், ஆஸ்திரேலிய நாட்டு அரச அலுவலர்களும் கலந்து கொண்டனர்.



சிட்னி தமிழ் மன்றம், ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். சிட்னி தமிழ் சமூகம், தமிழ்நாட்டிலும், தென்னிந்தியாவிலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மியான்மர், சீஷெல்ஸ், மொரிஷியஸ், பிஜி ஆகிய நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களிடமும் அதன் தோற்றம் மற்றும் பாரம்பரியத்தைப் போற்றும் அதே வேளையில், ஆஸ்திரேலிய சமூகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது.

இலக்கியம், நாட்டுப்புற கலைகள், கலாச்சார விழாக்கள், இசை மற்றும் நாடகம், பாரம்பரிய நடனம் மற்றும் பாரம்பரிய இசை மூலம் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதே தமிழ் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல்!

(ந.லோகதயாளன்)

தமிழ்நாடு, நாகப்பட்டின மீனவர்கள் கோடியக்கரை தென் கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் இலங்கை மீனவர்கள் எனச் சந்தேகிப்பவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு உடைமைகள் கொள்ளையிடப்பட்டன என்று முறையிடப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்தில் இருந்து பைபர் படகில் 3 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். இவர்கள் மீதே நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தி உடைமைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

இலங்கைப் படகில் வந்த மூவர், கட்டை மற்றும் கத்தியால் தங்களைத் தாக்கி தங்களிடம் இருந்த மீன்களையும், மீன்பிடி வலைகளையும் மற்றும் உடைமைகளையும் பறித்துச் சென்றுள்ளனர் என்று இன்று காலை தமிழகப் பொலிஸாரிடம் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

தாக்குதலின்போது படுகாயமடைந்த மீனவர் ஒரத்தூரில் உள்ள அரச மருத்துவமனையில் இன்று அதிகாலை



சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நாகை அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# அண்ணனும், தங்கையும் மின்னல் தாக்கி மரணம்!

## இரத்தோட்டையில் துயரம்

மின்னல் தாக்கியதில் அண்ணனும், தங்கையும் உயிரிழந்துள்ளனர்.

மாத்தளை, இரத்தோட்டை, வெல்ஹாலயாய பகுதியிலேயே நேற்றிரவு இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

23 வயதான அண்ணனும், 12 வயது தங்கையுமே உயிரிழந்துள்ளனர்.

இருவரின் சடலங்களும் இரத்தோட்டை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்கில்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தின நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா, குருமன்காடு, கலைமகள் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மே தினம் நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம், கொக்குவில் – பொற்பதி வீதியில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலய மண்டபத்தில் (பொற்பதிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில்) நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா. பார்த்தீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த உலகத் தொழிலாளர் தின நிகழ்வில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், சமூக அரசியல் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மே தினத்தைச் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பே உழைப்புக்கான உத்தரவாதம்' என்ற கருப்பொருளில் செம்பசுமை மே தினமாகக் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தின நிகழ்வு பருத்தித்துறை கூட்டுறவு மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

## தமிழ்த் தேசிய...

ஐக்கிய மக்கள் கூட்டணியின் மே தின விழாவில் கலந்துகொள்கின்றார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. தலவாக்கலையில் நடைபெறும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றார்.

மேல், சப்ரகமுவ, தென் மாகாணங்களில் உள்ள நமது கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை கொழும்பில் நடைபெறும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் மே தின விழாவில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன்.

மத்திய, ஊவா மாகாணங்களில் வாழும் நமது கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை தலவாக்கலையில் நடைபெறும் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன்.

கிளிநொச்சி, வன்னி உட்பட வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற நமது கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை கிளிநொச்சியில் நடைபெறும் தமிழர் ஐக்கிய மே தின ஊர்வலத்திலும் மற்றும் தமிழ்த் தேசிய மே தின விழாவிலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன்." – என்றார்.

## பாட்டியின்...

குறைக்கும் மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால் உயிரிழந்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி பாட்டி வீட்டில் இல்லாத நேரத்தில் பாட்டி பயன்படுத்தி வந்த இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகளை மேற்படி மாணவி அதிக அளவில் உட்கொண்டு மயக்கமுற்ற நிலையில் அயலவர்களின் உதவியுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 27 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

மேற்படி மாணவியின் தாய் சிறு வயதில் உயிரிழந்த நிலையில் தந்தை வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நானுஓயா பிரதேசத்தில் தனியாக வாழ்ந்து வந்துள்ளார். எனினும், மேற்படி மாணவி உயிரிழந்த சம்பவம் தந்தைக்குத் தெரியாத நிலையில் நுவரெலியா பொலிஸாரின் உதவியுடன் தந்தையைத் தேடி பிரேத பரிசோதனையின் பின் சடலம் நேற்று தந்தையிடம் ஒப்படைக்கப்படுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மேற்படி மாணவி, இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகளைத் தானாகவே அதிக அளவில் உட்கொண்டாரா? அல்லது வேறு யாரேனும் அவருக்குத் தெரியாமலேயே அதிக அளவில் மாத்திரைகளைக் கொடுத்தனரா? போன்ற பல கோணங்களில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## செட்டிகுளத்தில்...

போக்குவரத்துக்கு இடையூறு செய்து வருகின்றன என்று அவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்னர் இதே பகுதியில் பல மின்கம்பகளை உடைத்து யானைகள் சேதமாக்கியிருந்தன.

இந்நிலையில், இன்று காலை நோயாளர்களை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வாகனத்தையும் யானைகள் வழிமறித்ததுடன் நீண்ட நேரமாக போக்குவரத்துக்கு இடையூறாக வீதியில் நின்று பொதுமக்களுக்கு அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

மேலும், இந்த வீதியூடாகப் பயணிப்பவர்களும் அண்மித்துள்ள கிராமவாசிகளும் யானைகளால் உயிர் அச்சுறுத்தலுடனேயே வாழ்ந்து வருகின்றனர்.



# சுய தொழில் முயற்சியாளர்களுக்கு உதவித் திட்டங்கள் வழங்கி வைப்பு!




(பழுவூரான்)

மட்டக்களப்பு சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனத்தின் முயற்சியால் கல்லடி பாலச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் பெண் தலைமை தாங்கும் 30 குடும்பங்களைச் சேர்ந்த சுய தொழில் முயற்சியாளர்களுக்கு பல லட்சங்கள் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்வாதாரத்துக்கான சுய தொழிலைத் தொடர முடியாதுள்ள குடும்பங்களைத் தேடி வாழ்வாதாரத்துக்குக் கரம் கொடுக்கும் நோக்கில் பிரபல தொழிலதிபரும், சமூக செயற்பாட்டாளரும், ஈஸ்ட் லகூன் விருந்தினர் விடுதி உரிமையாளரும், மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவருமான தேசபந்து முத்துக்குமார் செல்வராசா மட்டக்களப்பு மாவட்டத்தில பல்வேறு பட்ட உதவிகளைச் செய்து வருகின்றார்.

அந்த வகையில் மட்டு சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய மூன்று கட்டங்களாக பல லட்சங்கள் பெறுமதியான உதவிகளை கல்லடி பாலச் சந்தையில் உள்ள சுய தொழில் முயற்சியாளர்களுக்காக வழங்கியுள்ளார்.

அதன் முதல் கட்டமாக சுமார் 2 லட்சம் செலவில் கூடாரத்தின் மேற்கூரை புதிதாக அமைத்து வழங்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக சேதமடைந்திருந்த கூடாரம் சீர் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் கட்டமாக அவர்களுக்கான நிரந்தர மேசைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த உதவித் திட்டங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் தொழிலதிபர் தேசபந்து மு.செல்வராசா, சமூக செயற்பாட்டாளர் ஆர்.வசந்தராசா, சமூக செயற்பாட்டாளரும், சமாதான நீதிவானும், சிரேஷ்ட ஊடகவியலாளரும் மட்டு சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனத்தின் ஸ்தாபக தலைவருமான உ.உதயகாந்த் உள்ளிட்ட பலரும் இதன் போது கலந்து கொண்டு உதவித் திட்டங்களை வழங்கினர்.

# கல்முனை பொதுச் சந்தையிலுள்ள வர்த்தக நிலையங்கள் நாளை மூடல்!

## மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கம் நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கம் நாளை முதலாம் திகதி பொதுச் சந்தையிலுள்ள வர்த்தக நிலையங்களை முற்று முழுவதுமாக எதுவித வியாபார நடவடிக்கைகளுமின்றி மூடவுள்ளது என்று அறிவித்துள்ளது.

தொழிலாளர்களுக்காக சுதந்திரத்தை வழங்குவதற்காகவும் அத்தினத்தில் எதுவித வியாபார நடவடிக்கைகளும் நடைபெறமாட்டாது என்றும் வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் அறிவிக்கிறது என்று கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாளை முதலாம் திகதி உலகளாவிய ரீதியில் தொழிலாளர்களுக்கான விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரை காலமும் எமது பொதுச் சந்தையின் ஊழியர்களுக்கான விடுமுறை வழங்கப்படாமை மிகவும் கவலையளிக்கிறது என்று எமது பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் எமது வர்த்தக சங்கத்திடம் பல முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக எமது கல்முனை மாநகர பொதுந் சந்தை வர்த்தக சங்கம், ஊழியர்களின் மேலான கோரிக்கையை கவனத்தில் கொண்டு முதலாளித்துவமாகிய வர்த்தகர்களின் முதுகெலும்பாகத் திகழும் ஊழியர்களின் வேண்டுகோளை நிறை வேற்று முகமாக இந்த விடுமுறையை அறிவித்துள்ளது.

எமது கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கம் நாளை முதலாம் திகதி எமது பொதுச் சந்தையிலுள்ள வர்த்தக நிலையங்களை முற்று முழுவதுமாக எதுவித வியாபார நடவடிக்கைகளுமின்றி மூடுகிறது. இத் தொழிலாளர்களுக்காக சுதந்திரத்தை வழங்குவதற்காகவும் அத்தினத்தில் எதுவித வியாபார நடவடிக்கைகளும் நடைபெறமாட்டாது என்பதனையும் வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

ஆகவே பொதுச் சந்தையிலுள்ள சகல கடை உரிமையாளர்களும் தங்கள் எது கடைகளை மூடி இத்தொழிலாளர்களுக்கான இந்தத் தினத்தில் இந்த கட்டாய ஓய்வை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கம் பணிவுடன் வேண்டிக் கொள்கிறது.

இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைத்து தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.-என்றுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அலஸின் அலப்பறை

போதை வஸ்து பாவனையாளர்கள் - விற்பனையாளர்கள் - கடத்தல்காரர்கள் - பாதாள உலகக் குழுவினர் போன்றோருக்கு எதிராக 'யுக்திய' என்ற பொலிஸ் நடவடிக்கையில் முனைப்பாக செயல்படுபவர்கள் இருவர். ஒருவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் - டிரான் அலஸ். மற்றவர் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

இவர்களில் ஒருவரான அமைச்சர் டிரான் அலஸ் அண்மையில் கூறிய கருத்து ஒன்று பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றது.

மேல் மாகாணம் மற்றும் தென்மாகாணத்தில் கிரிமினல் குற்றவாளிகளை ஒழிக்கும் மோட்டார் சைக்கிள் போரியல் பிரிவின் விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகளின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை களுத்துறையில் உள்ள விசேட அதிரடிப்படையின் முகாமில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் டிரான் அலஸ் சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

கிரிமினல்களை உலகில் இல்லாதவர்களாக்கி விடுவது பாவமே அல்ல என்ற சாரப்பட அவரின் உரை அமைந்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

கொலைகளைப் புரிந்தோர், போதைப் பொருள் விற்பவர்கள், அவற்றைக் கடத்துவோர்களை அழிப்பது குற்றமோ பாவமோ அல்ல என்று புதிதாக பயிற்சி பெற்று வெளியேறும் பொலிஸ் அதிகாரிகளுக்கு உபதேசம் செய்திருக்கின்றார் அமைச்சர் டிரான் அலஸ்.

''குற்றவாளிகளை இல்லாதவர்களாக்கி விடுவது குற்றமில்லை. சரியான விவகாரத்திற்காக உங்கள் கைகளில் உள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தத் தயங்க வேண்டாம். நாங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்போம்'' என அமைச்சர் கூறி இருக்கின்றமை பலத்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதற்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போர்க்கொடி தூக்கி உள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டு விசேட தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை, அவரின் இந்தப் பகிரங்கக் கருத்து வெளிப்பாட்டுக்காகப் பதவி நீக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தண்டனையிலிருந்து விடுபடுவதை ஊக்குவிக்கும் வகையிலும் சட்டவாட்சியை உதாசீனப்படுத்தும் வகையிலும் அமைச்சர் டிரான் அலஸ் தொடர்ச்சியாகக் கருத்து வெளியிடுகின்றமையால் அமைச்சர் அந்தப் பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவர் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் ''அமைச்சரின் இந்தக் கூற்று அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் குற்றவியல் நீதித் தீர்ப்புக் கட்டமைப்பை நிர்வகிப்பதற்காக நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கு முற்றிலும் முரணானது. குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை விதிப்பது உள்ளிட்ட நீதியை நிலைநாட்டும் செயற்பாடு அரசமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள நீதிமன்ற எல்லைக்குள் மாத்திரமே இடம்பெறுகின்றது. இடம்பெற வேண்டும். அத்தகைய செயற்பாடுகள் சட்டத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்படுகின்ற பூரண விசாரணை மற்றும் நியாயமான வழக்கு விசாரணை உள்ளிட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டனவாக அமைய வேண்டும்.'' - என்று சட்டத் தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

''சட்டத்தை நடைமுறைப்படுத்துவோரின் அண்மைகால சட்டவிரோத கொலைகள், தடுப்புக் காவல் மரணங்கள் துன்புறுத்தல் சம்பவங்கள் என்பவற்றில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை கவனத்தில்கொள்ளும்போது அமைச்சரின் இந்தக் கூற்றினூடாக நீதி, தண்டனை விதிப்பு, தண்டிக்கும் நீதிமன்றத்தின் விடயதானங்களுக்கு அப்பாற்பட்ட - உரிய நடைமுறைக்கு இணங்காத - தான்தோன்றித்தனமாக நிர்வகிக்கக்கூடிய - செயற்பாடு என்ற அபாயகரமான நிலைப்பாடு ஏற்படுகின்றமை தெளிவாகின்றது'' என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

சட்டத்திற்கு அப்பாலான காட்டாட்சி நடைமுறைக்கான தூண்டுதல் அரசியல் தலைமைளிடமிருந்தே ஊற்றெடுத்து அங்கீகாரம் பெறுகின்றது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

நீதியை அநீதியான முறையில் நிலைநாட்ட முயல்வதும் அநீதிதான்.





# நாடகவாக்க அணுகுமுறை நூல் வெளியீடு!

(பழுவூரான்)

கலாநிதி அழகையா விமல்ராஜ் எழுதிய நாடகவாக்க அணுகுமுறைகள் நூல் வெளியீடு மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இராஜதுரை அரங்கில் நேற்று திங்கட்கிழமை (29) இடம் பெற்றது.

கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இந்தியா மதுரைத் திறனாய்வாளர் பேராசிரியர் அ.ராமசாமி பிரதம விருந்தினராகவும், கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் சி.ஜெய்சங்கர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நூலின் முதன்மைப் பிரதிகளை நூலாசிரியரின் தாயார் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ்பாரதிகென்னடி,பேராசிரியர் அ.ராமசாமி, பேராசிரியர் சி.ஜெய்சங்கர்,



கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசாரப் பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம், பேராசிரியர் வ.இன்பமோகன் ஆகியோருக்கு வழங்கி வைத்தார்.

இதன்போது வெளியீடு செய்யப்பட்ட "நாடகவாக்க அணுகுமுறைகள்" நூலின் நயப்புரையை கிழக்குப் பல்கலைக் கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக நடன, நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.மோகன தாசன் நிகழ்த்தினார்.

# மன்னாரில் தர்பூசணி விற்பனை அமோகம்!



(மன்னார்)

நாடளாவிய ரீதியில் நிலவிவரும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வெப்பத்தின் அளவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் மன்னார் மாவட்டத்தில் வெப்பத்தின் தாக்கத்தை சமாளிப்பதற்கு தர்பூசணி மற்றும் நுங்கு கொள்வனவுகளில் பொது மக்கள் அதிகம் ஈடுபடுவதை காணக் கூடியதாக உள்ளது. உள்ளூர் சந்தைகளில் தர்பூசணிகளின் விலை சடுதியாகக் குறைந்துள்ள நிலையில் மக்கள் அதிகளவான தர்பூச ணிகளை கொள்வனவு செய்து வருகின்றனர்.

அதே நேரம் நுங்கு சர்பத் போன்ற இயற்கையான பானங்களையும் பருகி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மன்னார் நகர் பகுதியில் பல இடங்களில் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபரிகளால் தர்பூசணி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



# மன்னார் கவிஞர் வை.கஜேந்திரனுக்கு வழங்கப்பட்டது ‘சிறுவர் இலக்கிய விருது’

(வாஸ் கூஞ்ஞ)

வவுனியாவில் நடைபெற்ற ‘இரா உதயணன் இலக்கிய விருது’ விழாவில் மன்னார் கவிஞர் வை.கஜேந்திரன் ‘சிறுவர் இலக்கிய விருது’ வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வவுனியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (28) நடத்திய தமிழ் இலக்கியப் பெரு விழாவில் இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் 2020 ஆம் ஆண்டு எழுதிய ‘வைரமுத்துக்கள்’ என்ற சிறந்த நூலுக்கே ‘சிறுவர் இலக்கிய விருது’ வழங்கப்பட்டுள்ளது.

கவிஞர் வை.கஜேந்திரன் கவிதை, சிறுகதை , சிறுவர் இலக்கியம் என ஏழு நூல்களையும் , எட்டுக் குறும் படங்க ளையும் வெளியீடு செய்துள்ளார்.

இலக்கியப் பயணத்தில் ஈடுபட்டு வரும் இவர் வடமாகாணத்தின் இளங் கலைஞர் விருதையும் , மன்னார் மாவட்டம் ‘கலைச் செம்மல்’ விருதுடன் இன்னும் பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார். இந்த நிலையில் நடப்பு ஆண்டிலும் ‘சிறுவர் இலக்கிய விருது’ பெற்றுள்ளார்.

# தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பேரவையால் பரிந்துரை!

(எம். எப். நவாஸ்)

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விஷேட பேரவை ஒன்று கூடல் நேற்று (29) பேராசிரியர் கொலின் என் பீரிஸ் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கொழும்பில் உள்ள கல்விசார் திட்டமிடல் மையத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 03 - 2023 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவு கோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதி கூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரைத் தெரிவு செய்தனர்.

இதன் அடிப்படையில் முதலாவதாக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரும் இரண்டாவதாக பேராசிரியர் ஏ.எம். றஸ்மியும் மூன்றாவதாக பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப்பும் அதிக புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டனர்.





தென்கிழக்கு பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 09 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்று நிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த பெப்ரவரி மாதம் விடுத்திருந்தார்.

அதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழுபேர் விண்ணப்பித்திருந்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இந்த முறை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாத்திரமே விண்ணப்பித் திருந்தனர். பல்கலைக்கழகத்துக்கு வெளியே இருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை.

கடந்த 2021.08.09 ஆம் திகதியன்று பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் 5 ஆவது உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். இன்று தெரிவு செய்யப்பட்டுள்ள குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி ஆறாவது உபவேந்தராக நியமிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ‘பகலவன்’ நூல் வெளியீடு!

(வாஸ் கூஞ்ஞ)

பேசாலை அபிவிருத்திக் குழுவால் நூல், குறும்படம் மற்றும் பாடல் என்பன வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

வெளியீடு விழா பேசாலை அபிவிருத்திக் குழுத் தலைவரும் அதிபருமான செபஸ்தியாம்பிள்ளை இராஜேஸ்வரன் பச்சேக் தலைமையில் நடைபெற்றது.

பேசாலையைச் சேர்ந்த இளம்கலைஞர் றிச்மன் லெனின் ஆசாரியால் வடக்கு கிழக்கு மண் கடந்துவந்த யுத்தக் காலத்தை மையமாக கொண்டு எழுதப்பட்ட ‘பகலவன்’ என்ற நூல் வெளியீடு செய்யப்பட்டது. அத்துடன் குறும்படம் மற்றும் பாடல் வெளியீடும் இடம் பெற்றன.



பேசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அதிபருமான செபஸ்தியாம்பிள்ளை இராஜேஸ்வரன் பச்சேக் வெளியீடு செய்த நூலை, நூல் ஆசிரியரின் பெற்றோரிடம் கையளிக்க நூல் ஆசிரியரின் பெற்றோர் மன்னார் ஆயரிடம் ஒப்படைத்து ஆயரால் இந்த நூல் வெளியீடு செய்யப்பட்டது.

கடந்த சனிக்கிழமையன்று (27) பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இத்துடன் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், முன்னாள் குருமுதல்வர் அருட்பணி ஏ.சேவியர் குரூஸ் அடிகளார், முன்னாள் அதிபர் டிலாசால் சபை அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# கல்முனை நூலகத்தில் பண்டிகைக் கால நிகழ்வு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

ரமழான் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு என்பவற்றை முன்னிட்டு கல்முனை பொது நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட கொண்டாட்ட நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (29) நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரான என். பரமேஸ்வர வர்மன் ஆகியோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பண்டிகைகளை சிறப்பிக்கும் வகையில் நூலக உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்டிருந்த பலகாரங்களைக் கொண்ட விருந்துபசாரமும் இடம்பெற்றது.



# மடு பிரதேச கலைஞருக்கு மாகாண ஊக்குவிப்பு பரிசு

(மன்னார்)

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு வருடாந்தம் பிரதேச ரீதியாக எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் கலைஞர் ஊக்குவிப்பு நிதி இம்முறை 'மீ எழு தலைமை கொள்' மற்றும் 'இளமுகை' ஆகிய கவிதை நூல்களை வெளியிட்ட மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கலைஞருக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மடு பிரதேச செயலாளர் பிரிவில் பிரிவில் உள்ள பெரியபண்டிவிரிச்சான் கிராமத்தைச் சேர்ந்த கவிஞர், ஆசிரியர் இ.ர. ஜெயதீபன் (மடுவன்) என்பவருக்கு இது வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை வழங்குவது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை (29) மடு பிரதேச செயலகத்தில் மடு பிரதேச செயலாளர் கீ. பீட் நிஜாகரன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை பிரதேச செயலாளர் கவிஞரிடம் கையளித்தார். இதன் போது பிரதேச கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் உடனிருந்தார்.





# லைக்கா ஞானம் அறக்கட்டளையால் பதுளை மாணவர்களுக்கு உபகரணம்

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பதுளை வால்டிமார் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் நேற்று (29) வழங்கப்பட்டன.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஸ்தாபகர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிகாட்டலில் பதுளை மாவட்டத்தில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ளும் பாடசாலைகளில் ஒன்றான வால்டிமார் தமிழ் வித்தியாலயத்தின் அவசரத் தேவைகள் கண்டறியப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வால்டிமார் தமிழ் வித்தியாலயத்தின் 125 மாணவர்களுக்கு அத்தியாவசியமான பாடசாலைப் பைகள் மற்றும் எழுதுபொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபர், வலயக்கல்வி அலுவலக ஊழியர்கள் மற்றும் லைக்கா ஞானம் அறக்கட்டளை குழுவின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு பங்குதாரர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பாடசாலைப் பைகள் மற்றும் எழுது பொருள்கள் போன்ற அத்தியாவசியமாக கல்வி கற்றலுக்கு தேவையான பொருள்களை வழங்குவதை உறுதி செய்வதன் மூலம், லைக்கா ஞானம் அறக்கட்டளை, அந்தப் பகுதியின் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சேவை நலன்பாராட்டு நிகழ்வு

(எம். எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எஸ் எல்.தாஜுதீன் நேற்று (29) தனது 23 ஆண்டு விளையாட்டுத்துறை அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவருக்கான சேவை நலன்பாராட்டு நிகழ்வும் கௌரவிப்பும் அட்டப்பள கடற்கரை விடுதியில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபயவிக்ரம கலந்துகொண்டார். அதிதிகளாக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் அனீஸ், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி மானல் விக்ரமசிங்க உட்பட மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள், குடும்ப உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டனர்.



# நிந்தவூர் வைத்தியசாலையில் புத்தாண்டு விளையாட்டு விழா

(றியாஸ் ஆதம்)

தமிழ், சிங்கள புது வருடத்தைச் சிறப்பிக்கும் வகையில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் தமிழ், சிங்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த புத்தாண்டு விளையாட்டு விழா சனிக்கிழமை (27) இடம்பெற்றது.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு விளையாட்டு விழாவை ஆரம்பித்து வைத்தார்.



இந்த நிகழ்வில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், கல்முனை பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டாக்டர் எம்.ஏ.சி.மாஹிர், டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ். ஷாபி, பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல். அப்துல் கபூர் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

புத்தாண்டு விளையாட்டு விழாவின் போது பாரம்பரிய கலை, கலாசாரங்களை பிரதிபலிக்கும் விளையாட்டுக்கள் உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்கேற்றனர்.போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளால் பரிசுகளும் வழங்கப்பட்டன.





# கல்முனை சுகாதார பணிப்பாளர் பனங்காடு ஆஸ்பத்திரிக்கு விஜயம்

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் கடந்த சனிக்கிழமை (27) பனங்காடு பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.சகீலின் அழைப்பை ஏற்று அங்கு விஜயம் மேற்கொண்ட பணிப்பாளர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் விடுதிகள் உள்ளிட்ட ஏனைய பிரிவுகளுக்கும் சென்று பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து அவ்வைத்தியசாலை அபிவிருத்திக் குழு மற்றும் வைத்தியர்களுடன் கலந்துரையாடிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அங்குள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். அவற்றினை நிவர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

கல்முனை பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டாக்டர் எம்.ஏ.சி.மாஹிர், டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ். ஷாபி, பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அப்துல் கபூர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பணிப்பாளரால் வைத்தியசாலை வளாகத்தில் மரம் ஒன்றும் நடப்பட்டது.





# சத்தீஷ்காரில் இன்று என்கவுண்ட்டரில் ஏழு நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை!

ராய்ப்பூர்,ஏப்.30

சத்தீஷ்காரில் இந்திய பாதுகாப்புப் படையினர் நடத்திய என்கவுண்ட்டரில் ஏழு நக்சலைட்டுகள் சுட்டுக்கொல லப்பட்டனர்.

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க் கண்ட் போன்ற மாநிலங்கள் நக் சலைட்டுகள், மாவோயிஸ்ட்டுகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இந்த நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு தனிப்படை பொலிஸாருடன் இணைந்து மத்திய ரிசர்வ் பொலிஸ ாரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சத்தீஷ்காரின் நாரா யன்பூர் மற்றும் கன்கர் மாவட்டங்களின் எல்லையையொட்டி வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருக்கின்ற னர் எனப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அந்த வனப்பகுதி யில் இன்று காலை மாநில சிறப்பு தனிப்படை பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் பொலிஸார் மீது திடீர் துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலையடுத்து பொலிஸாரும் பதிலடி துப்பாக்கிச்சூடு நடத்தினர். பொலிஸார் நடத்திய துப் பாக்கிச்சூட்டில் 7 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# கார் - லொறி நேருக்கு நேர் மோதின; சிறுவன் உள்பட ஐவர் உயிரிழந்தனர்!

## கேரள மாநிலம் கண்ணூர் செருக்குன்னு அருகே சம்பவம்

திருவனந்தபுரம், ஏப். 30

கேரளாவில் கார் – லொறி நேருக்கு நேர் மோதிய விபத்தில் சிறுவன் உள்பட 5 பேர் உயிரிழந்தனர்.

கேரளா மாநிலம் காசர்கோடு மாவட் டம் சூரிக்காடு பீமநதி பகுதியை சேர்ந் தவர் சுதாகரன் (வயது 52). இவரது மனைவி அஜிதா (வயது 35). இவர்க ளுக்கு சவுரவ் என்ற மகன் இருக்கிறார். சவுரவ் கோழிக்கோட்டில் சி.ஏ படிப் பதற்கு, அங்குள்ள கல்லூரி ஒன்றில் சேர்ந்துள்ளார்.



சவுரவ்வை கல்லூரி விடுதியில் விட்டுவிட்டு வருவதற்காக சுதாகரன், அவரது மனைவி, மாமனார் கிருஷ்ணன் (வயது65) மற்றும் அஜிதாவின் அண்ணன் மகன் ஆகாஷ்(வயது9) ஆகியோர் காரில் தலச்சேரியில் இருந்து காசர்கோடு நோக்கி சென்றனர்.

காரை காசர்கோடு மாவட்டம் காளிச்ச நடுக்கம் சாஸ்தம்பாறை பகுதியை சேர்ந்த பத்மகுமார் (வயது 59) என்பவர் ஓட்டி சென்றார். சவுரவ்வை விடுதி யில் விட்டுவிட்டு சுதாகரன் உள்ளிட்ட மற்றவர்கள் காரில் திரும்பி வந்தனர். அவர்களது கார் கண்ணூர் செருக் குன்னு அருகே உள்ள புன்னச்சேரி பகுதியில் நேற்று இரவு வந்து கொண் டிருந்தது.

அப்போது அவர்களுக்கு பின்னால் வந்த ஒரு லொறி, காரின் மீது மோதி யதாகத் தெரிகிறது. இதனால் அவர் களது கார் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே காஸ் சிலிண்டர்கள் ஏற்றிக்கொண்டு வந். லொறி மீது நேருக்கு நேர் பயங்கரமாக மோதியது. இதில் காருக்குள் இருந்தவர்கள் லொறியின் முன்புறம் சிக்கி கொண்ட னர்.

இந்த சம்பவம் குறித்து பொலி ஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் முதலில் லொறிக்குள் சிக்கியிருந்த காரை வெளியே எடுத்த னர். பின்பு காரில் இருந்தவர்களை மீட்டனர். அப்போது காரில் இருந்த சுதாகரன், அவரது மனைவி அஜிதா, மாமனார் கிருஷ்ணன், காரின் டிரை வர் ஆகிய 4 பேரும் சம்பவ இடத்தி லேயே உடல் நசுங்கி உயிரிழந்தி ருந்தனர்.

மேலும் அந்த காரில் இருந்த சிறு வன் ஆகாஷைப் படுகாயங்களுடன் மீட்ட பொலிஸார், அவனை அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்த னர். அங்கு சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே அவன் இறந்து விட்டான் எனத்தெரிவித்தனர். இதனால் இந்த விபத்தில் பலியான வர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந் தது.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்த பொலிஸார் 2 லொறி களின் டிரைவர்களையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




# கொலம்பியாவில் இராணுவ ஹெலி விழுந்து நொறுங்கியது; 9 பேர் பலி

பொகோடா, ஏப். 30

கொலம்பியாவில் இராணுவ ஹெலிக் கொப்டர் விழுந்து நொறுங்கியது 9 வீரர்கள் பலியாகியுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு தேவையான பொருள்களை வழங்கிவிட்டு திரும்பியபோது விபத்து நிகழ்ந்துள்ளது.

கொலம்பியாவின் வடக்கு பகுதியில் உள்ள சான்டா ரோரா நகராட்சியில் முகாமிட்டுள்ள இராணுவ வீரர்களுக்குத் தேவையான பொருள்கள் ஹெலிக் கொப்டரில் கொண்டு செல்லப்பட்டன. பொருள்களை இறக்கிவிட்டுப் புறப்பட்ட ஹெலிக்கொப்டர் சிறிது நேரத்தில் விழுந்து நொறுங்கியது. இதில், ஹெலிக் கொப்டரில் இருந்த 9 வீரர்களும் பலியாகினர். உள்ளூர் நேரப்படி நேற்று மதியம் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

புறப்பட்ட சிறிது நேரத்தில் ஹெலிக் கொப்டர் தரைக்கட்டுப்பாட்டு நிலையத் துடனான தொடர்பை இழந்ததாகவும், பின்னர் சாண்டா ரோசா நகராட்சிக்கு அருகில் விபத்துக்குள்ளானது தெரிய வந்ததாகவும் இராணுவம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும், போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள் இராணுவ வீரர்களுக்குப் பொருள்களை வழங்கிவிட்டு திரும்பியபோது விபத்து நிகழ்ந்ததாகவும் அவர் கூறி உள்ளார்.

சான்டா ரோசா பகுதியில் சமீபத்தில் தேசிய விடுதலை ராணுவத்தின் கொரில்லா குழுவிற்கும் வளைகுடா குலம் எனப்படும் போதைப்பொருள் கடத்தல் குழுவிற்கும் இடையே கடும் சண்டை ஏற்பட்டது. இதையடுத்து, அங்கு இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் கரோலினாவில் நடந்த துப்பாக்கிச் சமரில் 3 பொலிஸார் சாவு!

## ஐந்து பொலிஸாருக்குப் படுகாயம்




வொஷிங்டன்,ஏப்.30

அமெரிக்காவில் நடந்த துப்பாக் கிச் சமரில் மூன்று பொலிஸார் உயிரிழந்தனர். 5 பொலிஸார் படுகாயமடைந்தனர்.

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணம் சார்லொடி நகரில் உள்ள குடியிருப்பில் சிலர் ஆயுதங்களுடன் இருக்கின்றனர் எனப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அந்த குடியிருப்பு பகுதிக்கு சென்ற பொலிஸார் ஒரு வீட்டில் சோதனை செய்தனர். அப்போது, அந்த வீட்டில் பதுங்கி இருந்த நபர்கள் பொலிஸார் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். உடனடியாக சுதாகரித்துக்கொண்ட பொலிஸார் பதிலடி தாக்குதல் நடத்தினர்.

மூன்று மணிநேரத்திற்கு மேல் நீடித்த துப்பாக்கிச்சூட்டில் 3 பொலிஸார் உயிரிழந்தனர். 5 பொலிஸார் படுகாயமடைந்தனர். துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்திய ஒரு நபர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் தப்பியோடினார். இதையடுத்து, தப்பியோடிய நபரை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

பக்கங்கள் - 5

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 30/04/2024

## ஆபத்தான புதிய வகை புழு கனடாவில் முனெச்சரிக்கை



கனடாவில் ஆபத்தான புதிய வகை புழு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

C2▶



# காலிஸ்தான் கொடி, கோஷங்களுடனான நிகழ்வில் கனடாவின் சகல தலைவர்களுமா?

## சீற்றத்துடன் விளக்கம் கோருகின்றது இந்தியா

## துணைத் தூதுவரையும் புதுடில்லி மீளழைத்தது

ஒன்ராரியோ, ஏப்ரல் 30

சீக்கியர்களின் பெரும் நடைபவனியில் கனடாவின் பிரதான கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்குபற்றியமையைத் தொடர்ந்து, இந்தியாவுக்கான கனடியத் தூதரிடம் இந்திய அரசாங்கம் விளக்கம் கோரியுள்ளது.


அத்துடன் கனடாவுக்கான இந்தியாவின் துணைத் தூதுவரையும் இந்தியா மீளப்பெற்றுள்ளது.

ஏப்ரல் 28ஆம் திகதி டொரன்டோவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவே மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜெக்மித் சிங் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டோர் 'காலிஸ்தான்' என கோஷமெழுப்பியதோடு, அது சார்ந்த கொடிகள் மற்றும் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

C2▶





# நோரோ வைரஸ் தொற்று இம்முறை அதிக வேகம், வீச்சத்துடன் பரவல்!

கனடாவில் நோரோ வைரஸ் என்னும் வைரஸ் தொற்று எதிர்பார்க்கப்பட்டதனை விடவும் அதிக வேகமாகப் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய பொதுச் சுகாதார அலுவலகம் இது குறித்து அறிவித்துள்ளது.

இத்தொற்றினால் வயிற்றுவலி, வாந்தி, தசைபிடிப்பு மற்றும் வயிற்றோட்டம் உள்ளிட்ட நோய்த் தாக்கங்கள் ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளை விடவும் இந்த ஆண்டில் நோரோ வைரஸ் தாக்கத்தின் பாதிப்பு அதிகமாக காணப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மற்றும் அல்பேர்ட்டா மாகாணங்களில் கூடுதல் எண்ணிக்கையில் நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அமெரிக்காவின் ஒஹியோவின் நோர்வால்க் பகுதியில் முதன் முறையாக இந்த வைரஸ் தாக்கம் பரவிய காரணத்தினால் இதற்கு நோரா வைரஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்றுக்கு குறிப்பிட்ட விசேட சிகிச்சை முறைமைகள் எதுவும் கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காலிஸ்தான் கொடி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'குழப்பத்தையேற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் தொடர்ந்தும் அனுமதிக்கப்படுகின்றன என' இந்த நிகழ்வை இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

"கனடாவில் பிரிவினைவாதம், தீவிரவாதம் மற்றும் வன்முறைக்கு அரசியல் இடம் கொடுக்கப்பட்டுள்ளதை இது மீண்டும் ஒருமுறை எடுத்துக் காட்டுகிறது" என்று இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

டொரோண்டோவில் கல்சா தின கொண்டாட்டத்தில் பேசுவதற்காக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவோம் வந்திருந்தார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உரையாற்றி கொண்டிருந்த தருணத்தில் காலிஸ்தான் சார்பு கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதற்கு அவர் எவ்வித கருத்துகளையும் முன்வைக்கவில்லை.

இதுகுறித்து ஆழ்ந்த கவலை மற்றும் வலுவான எதிர்ப்பை இந்தியா வெளியிட்டுள்ளது.

இது போன்ற வெளிப்பாடுகள் இந்தியா-கனடா உறவுகளை பாதித்தது மட்டுமல்லாமல், கனடாவில் வன்முறையை ஊக்குவிக்கிறது. இது நாட்டின் குடிமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் இந்தியா கூறியுள்ளது.

கல்சா தின அணிவகுப்பில் உரையாற்றிய ட்ரூடோ, சமூக மையங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக தனது அரசாங்கம் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

"இந்த நாடு முழுவதும் வாழும் ஏறத்தாழ 800,000 சீக்கிய பாரம்பரியத்தை கொண்ட கனேடியர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாக்க நாங்கள் எப்போதும் இருப்போம்.

உங்கள் சமூகத்தை வெறுப்பு மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராக நாங்கள் எப்போதும் பாதுகாப்போம்" என்றும் கனேடிய பிரதமர் கூறினார்.

கடந்த ஆண்டு கனடாவில் காலிஸ்தான் சார்பு தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே வலுவான தொடர்பு இருப்பதாக ட்ரூடோ குற்றம் சாட்டியதை அடுத்து இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவுகள் முறிந்தன.

இந்தியா இந்தக் குற்றச்சாட்டுகளை கடுமையாக நிராகரித்தது. "அபத்தமானது மற்றும் ஆதாரமற்றது" என்று கூறியது. மேலும் நாட்டிற்கான விசா சேவைகளை தற்காலிகமாக நிறுத்தியது. கட்டத்தில்

இந்த சம்பவத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் முறுகல் போக்கே நிலவுகிறது. இவ்வாறான பின்புலத்திலேயே கனேடிய பிரதமர் கலந்து கொண்ட நிகழ்வில் காலிஸ்தான் கோஷம் எழுப்பப்பட்டுள்ளது.

## ஆபத்தான...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடனாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் ஹமர்ஹெட் புழு அல்லது ப்ரோட்ஹெட் ப்லானெரியன் என்ற புழு வகை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகை புழு சுமார் மூன்று அடிகள் வரையில் வளரும் எனவும், இது ஆபத்தானது எனவும் சுட்டிக்காடடப்பட்டுள்ளது.

ஹமில்டன் மற்றும் நியூமார்கட் பகுதிகளில் இந்த புழு வகை அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை புழுக்கள் பொதுவாக தென்கிழக்காசிய நாடுகளில் காணப்படுபவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகை புழு விரைவில் பரவக் கூடியவை என புழு தொடர்பான நிபுணரும் ஆய்வாளருமான ஜோன் ரெய்னோல்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வகை புழுக்களை கையில் தொட வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வகை புழுக்கள் கடந்த காலங்களில் கியூபெக் மாகாணத்திலும் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



# நல்லிணக்கச் சட்டத்திற்கான தேசிய பேரவை; கனடிய நாடாளுமன்று ஏகமனதாக அங்கீகாரம்

ஒன்ராறியோ, ஏப்ரல் 30

நல்லிணக்கச் சட்டத்திற்கான தேசிய பேரவையானது கனடிய நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பேரவையானது பூர்வீகக் குடிகளுடனான நல்லிணக்கத்தை நோக்கிய கனடாவின் தேர்ச்சியை மேற்பார்வை செய்யும் 13 பணிப்பாளர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நகர்வானது அர்த்தமுள்ள மாற்றத்தை நோக்கியும், ஆற்றுப்படுத்தலை நோக்கியும் கனடா நகர்வதைக் குறிப்பதாக பூர்வீகக் குடிகள் நலன்பேண் அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை எட்டும் இலக்குடன் பொறுப்புடைமையில் முன்னேற்றத்தை இது வெளிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் 29ஆம் திகதி திங்கட்கிழமை இது தொடர்பில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 324 உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.



# ஒட்டாவாவில் புதிய பிராந்திய அலுவலகம் திறக்க ஒன்ராறியோ மாகாண அரசு முடிவு

ஒன்ராறியோ,ஏப்ரல் 30

ஒன்ராறியோ மாகாண அரசாங்கமானது ஒட்டாவாவில், ஒரு புதிய பிராந்திய அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்திற்கும், ஒட்டாவா நகரத்திற்கு இடையில் ஜனவரி மாதம் இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களுக்கு இடையிலான சிறந்ததொரு இணைப்பாக இந்த அலுவலகம் இருக்கும் என ஒன்ராறியோ முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

# ஒக்.7 தாக்குதலைப் புகழ்வது வெறுக்கத் தக்க நடவடிக்கை

## மாகாண முதல்வர் டேவிட் எபி கண்டனம்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 30

வென்கூவரில் “ஒக்டோபர் 7 நீண்ட காலம் வாழ்க” எனும் போராட்டக்காரர்களின் கோஷத்தை மாகாண முதல்வர் டேவிட் எபியும், ஏனைய அரசியல்வாதிகளும் கண்டித்துள்ளனர்.

ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் முன்னெடுத்த தாக்குதலை துணிச்சல் மிக்கது என சமிடூன் பலஸ்தீனிய கைதிகள் ஒருமைப்பாட்டு வலையமைப்பு தெரிவித்திருந்தது.

சுமார் 1,200 பேரைக் கொன்ற தாக்குதல் பற்றிய இத்தகைய கருத்துக்கள் வெறுக்கத்தக்கவை என வென்கூவர் முதல்வர் டேவிட் எபி குறிப்பிட்டுள்ளார்.







# சர்வதேச மாணவர்களுக்கு வாரத்துக்கு 24 மணி வேலை

## கனடிய அரசாங்கம் அனுமதி

ஒன்ராரியோ, ஏப்ரல் 30

செப்ரம்பர் மாதம் முதல் சர்வதேச மாணவர்களுக்கு வாரம் ஒன்றிற்கு 24 மணித்தியாலங்கள் வேலை செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றின் போது சர்வதேச மாணவர்களுக்கான வேலை செய்வதற்கான நேரத்தை 20 மணித்தியாலங்களில் இருந்து கனடிய அரசாங்கம் அதிகரித்திருந்தது.

2022 ஒக்டோபருக்கு பின்னர், இந்த விதிகளில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்த அரசாங்கம், 2023 டிசம்பரில் மீண்டும் 30 மணித்தியாலங்களுக்கு மேல் சர்வதேச மாணவர்கள் வேலை செய்ய முடியும் என அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்புக்கான காலம் ஏப்ரல் 30ஆம் திகதி நிறைவுக்கு வருகின்றது.

எனினும், வாரம் ஒன்றிற்கு 30 மணித்தியாலங்கள் வரை கால அளவினை அதிகரிப்பதற்கு திட்டமிட்டு வருவதாக குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்திருந்த போதிலும், சர்வதேச மாணவர்களின் பிரதான நோக்கம் கற்பதேயன்றி, வேலைசெய்வதல்ல என்பதனை கருத்தில் கொண்டு வாரம் ஒன்றிற்கு 24 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.





# தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு; கட்டுப்படுத்த புதிய சட்ட ஏற்பாடுகள்!

ஒன்ராரியோ,ஏப்ரல் 30

கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடுகளை கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளில் புதிய உள்ளடக்கங்களை சேர்ப்பதற்கு கனடிய மத்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டு செல்வாக்கு தொடர்பிலான மத்திய அரசாங்கத்தின் விசாரணைக்குழுவின் பூர்வாங்க அறிக்கை இதுவரை வெளியாகாத நிலையில், மத்திய அரசாங்கம் புதிய வெளிநாட்டு தலையீட்டு குற்றங்கள் என்ற பிரிவைத் தகவல் சட்டத்தின் பாதுகாப்பு என்ற சட்டப் பிரிவுக்குள் உள்ளடக்கத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

கனடிய ஆர்வங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என அறிந்து வெளிநாட்டு அமைப்புக்கு பயனளிக்கும் வகையில் மறைமுகமான அல்லது ஏமாற்று கரமான செயற்பாட்டினை முன்னெடுப்பதைக்குற்றமாக்கும் வகையில் இந்த உள்ளீடு அமையவுள்ளது.

தற்போது வெளிநாட்டு தலையீடு சார்ந்த அச்சுறுத்தல்கள் அல்லது வன்முறை சார்ந்து செயற்படும் தகவல் சட்டத்தின் பாதுகாப்பு என்ற சட்டத்தின் அளவெல்லையை இது பரவலாக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஹமாஸிற்கு ஆதரவாகக் கோஷமெழுப்பியவர் குற்றத்தை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்




ஒன்ராரியோ, ஏப்ரல் 30

பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தில் ஹமாஸிற்கு ஆதரவாக கோஷமெழுப்பிய சந்தேகநபர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

வேறொரு குற்றச்சாட்டில் பிணையில் இருக்கும் குறித்த சந்தேகநபர் இந்த செயலின் ஊடாக பிணை நிபந்தனைகளை மீறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டாவாவில் வீட்டுக் காவலில் இருக்க வேண்டிய சந்தேகநபர், அதனை மீறி வந்து போராட்டத்தில் கலந்துகொண்டார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த சந்தேகநபருக்கு தண்டனையளிக்கும் போது, ஹமாஸுக்கு ஆதரவான கோஷத்தை தூண்டும் காரணியாக கருதி தண்டனையளிக்கப்படல் வேண்டும் அரச தரப்பு சட்டத்தரணிகள் நீதிபதியிடம் கோரியுள்ளனர்.

# பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்துக்கான கூடாரங்களை அகற்றும் எண்ணமில்லை

## மொன்ரியல் மெக்கில் பல்கலை மாணவர் உறுதி



கியூபெக், ஏப்ரல் 30

மொன்ரியல் மெக்கில் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களை அகற்றும் எண்ணம் இல்லை என பலஸ்தீன ஆதரவு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கூடாரம் அமைத்தல் செயற்பாட்டை சட்டவிரோதமானது என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களில் இந்த கூடாரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், அதில் கூடும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாகம், அதில் பெரும்பாலானவர்கள் பல்கலைக்கழகத்தைச் சாரந்தவர்கள் அல்லர் எனத் தெரிவித்துள்ளது.

போராட்டத்தின் போது யூத எதிர்ப்பு மொழியும், பயமுறுத்தும் நடத்தையையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கியூபெக்கின் மதச்சார்பின்மைச் சட்டத்தை சவாலுக்குட்படுத்த ஆசிரியர் சங்கம் முடிவு!

கியூபெக், ஏப்ரல் 30

கியூபெக்கின் மதச்சார்பின்மைச் சட்டத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப் போவதாக கியூபெக்கின் பாரிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆங்கில மொன்ரியல் பாடசாலை சபை ஏற்கனவே சவாலுக்குட்படுத்தியதைப் போலவே தமது சங்கமும் உயர்நீதிமன்றத்தின் உதவியை நாடவுள்ளதாக தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் உரிமைகளைப் பாதிக்கும் வகையில் கியூபெக் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்ட சட்டமூலம் 21ஆனது, ஆசிரியர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நீதிபதிகள் உள்ளடங்கலாக பொது ஊழியர்கள் மத அடையாளங்களை வேலையில் அணிவதனை தடைசெய்கின்றது.

இந்த சட்டமூலம் கியூபெக்கின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட போது, மேன்முறையீட்டு நீதிமன்றம் மதச்சார்பின்மை சட்டத்திற்கு ஆதரவாகவே தீர்ப்பளித்தது.